தினகரன்

30.01.2018

டிஎன்பிஎல் சார்பில்

# உடல்நல விழிப்புணர்வு கருத்தரங்கு முகாம்




டிஎன்பிஎல் சார்பில் உடல் நலம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு முகாம் நடைபெற்றது .

க.பரமத்தி ஜன.30: டிஎன்பிஎல் சார்பில் உடல் நலம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு முகாம் நடைபெற்றது .

கரூர் டிஎன்பிஎல் காகித ஆலை நிறுவன சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள காகிதபுரம், புஞ்சைபுகழூர், புஞ்சை தோட்டக்குறிச்சி ஆகிய பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சைபுகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளில் உடல் நல விழிப்புணர்வு கருத்தரங்கு முகாம் நடைபெற்றது. டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற தொடக்க விழாவிற்கு பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் தலைமை வகித்தார். பொது மேலாளர் (மின்சாரம் மற்றும் கருவியியல்) பாலசுப்பிரமணியன் விழிப்புணர்வு கையேடுகளை வழங்கினார். இயற்கை யோகா மருத்துவமனை டாக்டர் சுப்பிரமணியம் இயற்கையோடு இணைந்த ஆரோக்கியமான வாழ்க்கை முறை பற்றி விளக்கினார்.